பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.23.07.2018

**நிகழும் திருவள்ளுவராண்டு ஜூலை மாதம் 25ம் நாள் (25.07.2018) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்:1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் ஜூன் 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி நகராட்சி பொறியாளர் ஜூன் 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் ஜூன் 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி துப்புரவு அலுவலர் ஜூன் 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.5 | பரமக்குடி நகராட்சியில் சி.எஸ்.எம். போர்டிங் சாலையில் போக்குவரத்து கழக பணிமனை அருகில் நவீன ஆட்டு இறைச்சிக்கூடம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி ஆடடி சாலையில் தினமும் சுமாராக 6 முதல் 8 வரையிலான ஆடுகள் உரிய பரிசோதனைக்கு பின் வதை செய்யப்பட்டு சுகாதாரமான முறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்ட சுற்றுசூழல் அலுவலக நடப்பு குறிப்பாணை எண்.மா.சூ.பொ/இராம/வி.கே/2018, நாள்.06.02.2018ன்படி எந்த ஒரு நிறுவனமும், கழிவு நீரை வெளியேற்ற சம்மந்தப்பட்ட மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் இசைவாணையை பெற்றிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி மேற்படி நவீன ஆட்டு இறைச்சி கூடத்திற்கு உரிய இசைவாணை பெற வேண்டியுள்ளது. மாவட்ட சுற்றுசூழல் அலுவலகத்திலிருந்து இது குறித்து கோரப்பட்ட அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்த பின், 2007.08 முதல் நாளது தேதி வரையிலான காலத்திற்கு Water act மற்றும் Air Act ஆகியவற்றிற்கான கட்டணம் ரூ.42,400/– செலுத்தக்கோரி கடிதம் வழங்கியுள்ளார்கள். இதன்படி மேற்படி கட்டணம் ரூ.42,400/–யை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| பொருள்.6 | இந்நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறை அமைத்தல், சமுதாய கழிப்பிடம் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் செயல்படுத்துதல் திறந்தவெளி கழிப்பிடம் ஒழித்தல் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.<br><br>மேற்கண்ட பணிகள் தொடர்பாக நகரின் அனைத்து பகுதிகளிலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பணிபுரிந்து வரும் பரப்புரையாளர்களைக் கொண்டு பொதுமக்களுக்கு தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், தூய்மை இந்தியா இயக்கத்திலிருந்து அவ்வப்போது வரப்பெறும் சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப மாதந்தோறும் சிறப்பு விழிப்புணர்வு கூட்டம் ஏற்பாடுகள் செய்வதற்கும், ஆங்காங்கே விளம்பர பதாகைகள் வைப்பதற்கும், டிஜிட்டல் பேனர்கள் வைப்பதற்கும், செய்தித்தாள்களில் விளம்பரம் செய்திடவும், துண்டு பிரசுரங்கள் அச்சிடவும் மற்றும் உள்ளூர் தொலைக்காட்சியில் விளம்பரம் செய்யவும் வேண்டியுள்ளது.<br><br>மேலும், திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளில் மக்கும் குப்பைகளை, குப்பைகள் உருவாகும் பகுதியிலேயே உரமாக்கிட தேவையான உபகரணங்கள் வாங்கிடவும், மக்கும் குப்பைகளை விரைவில் மக்க வைப்பதற்குத் தேவையான E.M.Solution, வருடம் முழுவதும் தயாரிப்பதற்காக, அதற்குத் தேவையான அடிப்படை பொருட்கள் வாங்கிடவும், மேலும் மேற்படி பணிகள் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து அவ்வப்போது தெரிவிக்கப்படும் ஆலோசனைகளுக்கேற்ப பணிகள் மேற்கொள்ளபட வேண்டியுள்ளது.<br><br>எனவே, மேற்கண்ட பணிகளை ஆண்டு முழுவதும் உடனுக்குடன் தொடர்ந்து செய்ய வேண்டியுள்ளதால், வருடாந்திர செலவினங்களுக்காக ரூ.2,50,000/–ற்கு ஒதுக்கீடு செய்வதற்கும், சம்மந்தப்பட்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசு நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை பயனாளர் கட்டணம் (SUC) நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.7 | திடக்கழிவு மேலாண்மை விதி 2016 பிரிவு 21 (2)ல் இந்நகராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைகளில் விற்பனை செய்ய முடியாத எதற்கும் பயனற்ற, எளிதில் தீப்பிடிக்க கூடிய அதிக கலோரி திறனுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை 100 கி.மீ மிகாமல் உள்ள சிமிண்ட் தொழிற்சாலைக்கோ, தெர்மல் பவர் பிளாண்டிற்கோ அனுப்பிவைத்து இறுதியாக்கம் செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9584/2018/பி3, நாள்.22.06.2018 கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, சென்னையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் காளையார்கோவிலில் உள்ள Altan power plant உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு இந்நகராட்சியில் சேகரிக்கப்படும் எளிதில் தீப்பற்றக்கூடிய விற்பனை செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகளை இறுதியாக்கம் செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பகுதியில் சராசரியாக நாளொன்றுக்கு 5 மெ.டன் பிளாஸ்டிக் சேகரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட கழிவுகளை மேற்காணும் நிறுவனத்திற்கு அனுப்பிவைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

அலுவலகக்குறிப்பு –
மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.8

இந்நகர்மன்றத் தீர்மான எண்.532, நாள்.18.06.2018–ன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் 10 ஓட்டுநர்களைக் கொண்டு பொதுசுகாதார வாகனங்களை இயக்கும் பணிகள் மேற்கொள்ள 10.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டுள்ள மூன்று நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1. Exsernet, Madurai
2. A.V.M. Serivice Point, Rajapalayam.
3. Ever Green Enviornment Services, Ramanathapuram

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 10.07.2018 அன்று மேலாளர், சுகாதார அலுவலர் மற்றும் வந்திருந்த ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் பொறியாளர் அவர்களால் திறக்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து வரப்பெற்ற தொழில்நுட்ப புள்ளிகள் 11.07.2018 அன்று தொழில்நுட்பபுள்ளி சரிபார்த்தல் படிவம் மூலம் ஆணையாளர், பொறியாளர், மேலாளர் மற்றும் சுகாதார அலுவலரால் சரிபார்க்கப்பட்டதில், கீழ்கண்டுள்ள இரண்டு நிறுவனங்களின் தொழில்நுட்ப புள்ளிகள் முழு தகுதி பெற்றுள்ளன.

1) Exsernet, Madurai
2) A.V.M. Serivice Point, Rajapalayam.

ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி, ஒப்பந்தப்புள்ளிகளின் விலை குறிப்பிட்டுள்ள புள்ளிகள் (Financial Bid) 16.07.2018 அன்று பொறியாளர் அவர்களால் திறக்கப்பட்டது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு கூலி (EPF) உட்பட ரூ. | இதர படிகள் (ESI + LWF, நிர்வாக செலவினங்கள் மற்றும் இதர செலவினங்கள்) ரூ. | மொத்த விலை |
|---|---|---|---|---|
| 1. | Exsernet, Madurai | 492 | 72 | 564 |
| 2. | A.V.M. Serivice Point, Rajapalayam | 493 | 72,50 | 565,50 |

மேற்கண்டவாறு விலை குறிப்பிட்ட புள்ளிகள் (Financial Bid) வரப்பெற்றுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி ஊதிய விகிதத்துடன் (EPF) உட்பட கூடுதலாக ESI, சீருடைகள், நிர்வாக செலவினங்கள் மற்றும் இதர செலவினங்களுக்காக 10% +4.75% = 14.75 % தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கணக்கீடு செய்த வகையில் தினக்கூலி ரூ.493+ இதர படிகள் (14.75%) ரூ.73 = ரூ.566 என உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள குறைந்தபட்சமாக ரூ.564 தொகை குறிப்பிட்டுள்ள Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.
(ந.க.எண்.1948/2015/எச்2)

அலுவலகக் குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) குறைந்தபட்சமாக ரூ.564 தொகை குறிப்பிட்டுள்ள Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

3) செலவினத்தை பொது நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் பயனாளர் கட்டண நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.9

இந்நகராட்சி பொது சுகாதார டிராக்டர் டிரைலர் வாகனம் TN65 AZ1094க்கு இரண்டு பின்புற டயர்களும் முற்றிலும் தேய்மானம் அடைந்துள்ளதாகவும், அதனால் வாகனம் அடிக்கடி பஞ்சர் ஆகி வாகனத்தை இயக்க முடியாத நிலையில் உள்ளதாகவும், அதனால் புதிதாக இரண்டு டயர்கள் வாங்கி வழங்குமாறு மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநர் தெரிவித்ததின் அடிப்படையில் புதிதாக இரண்டு பின்புற டயர்கள் கொள்முதல் செய்ய நகர்மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் 19.07.2018ம் தேதிய முன் அனுமதியின்படி சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் 23.07.2018 அன்று கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| **வ. எண்** | **விநியோகம் செய்ய வேண்டிய பொருட்கள்** | **ரத்னா டயர்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி** | **அம்ரித்தா டயர்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி** |
|---|---|---|---|
| 1 | 2 பின்புற டயர்கள் (11 – 2 – 28 Type) | ரூ.24800/– | ரூ.25200/– |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு டயர்கள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி வழங்கிய ரத்னா டயர்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு –

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் 19.07.2018ம் தேதிய முன் அனுமதியின்படி விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. குறைந்த தொகைக்கு டயர்கள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி வழங்கிய ரத்னா டயர்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
4. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1919/2018/எச்2

பொருள்.10

பரமக்குடி நகராட்சி ஒரு லட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட நகராட்சியாகும். இந்நகராட்சியில் 24703 குடியிருப்புகள் மற்றும் 5000க்கு மேற்பட்ட கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. இந்நகராட்சியில் தினமும் 10000 பேர் வந்து செல்கின்றார்கள். மேற்கண்ட குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மூலம் தினசரி 35 மெட்ரிக் டன் அளவுள்ள திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. மேலும், வீடுகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களிடமிருந்து திரவக்கழிவுகளும் வெளியாகிறது.

இந்நகராட்சியில் புதை வடிகால் திட்டம் அமலில் இல்லாத காரணத்தால் திடக்கழிவு மற்றும் திரக்கழிவு மேலாண்மை துப்புரவு பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி கடிதம் எண்.K.Dis.No.18861/பி3/2015, நாள்.12.07.2015ன்படி இந்நகராட்சியில் 2015ம் ஆண்டின் மக்கள் தொகைக்கு அரசு ஆணை எண்.101ல் தெரிவித்துள்ள அளவுகோலின்படி 307 துப்புரவுப் பணியாளர்கள் தேவை என்றும், அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 159 போக

மீதமுள்ள 148 காலி பணியிடங்களுக்கு வெளியிலிருந்து (Outsourcing) மூலம் பணியமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி 148 பணியாளர்களை அரசு வழிகாட்டுதலின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி Outsourcing மூலம் பெறப்பட்டு 01.11.2015 முதல் இன்று வரை துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட்டு 3 வருடங்கள் ஆகி விட்டபடியாலும், தற்சமயம் பரமக்குடி நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட 159 துப்புரவு பணியாளர் பணியிடங்களில் 74 பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். 85 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளது. மேலும், இந்நகராட்சியில் தற்போதுள்ள மக்கள் தொகை குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கேற்ப அரசு ஆணை எண்.101ல் தெரிவித்துள்ள அளவுகோலின்படி கீழ்கண்டவாறு பணியாளர்கள் தேவை என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1) 250 வீடுகளுக்கு 3 பேர் கொண்ட குழு வீதம் 24703 குடியிருப்புகளுக்கு தேவைப்படும் பணியாளர்கள் | – 297 |
| 2) 4700 வணிக நிறுவனங்களுக்கு (500 நிறுவனங்களுக்கு 2 பேர் கொண்ட குழு வீதம் | – 18 |
| 3) டிப்பர் லாரி 2க்கு தேவைப்படும் பணியாளர்கள் | – 8 |
| 4) டிராக்டர் டிரைலர் 3க்கு தேவைப்படும் பணியாளர்கள் | – 9 |
| 5) டம்பர் பிளேசர் 2க்கு தேவைப்படும் பணியாளர்கள் | – 2 |
| 6) காம்பாக்டர் லாரி 2க்கு தேவைப்படும் பணியாளர்கள் | – 4 |
| 7) கழிவு நீர் ஊர்திக்கு தேவைப்படும் பணியாளர்கள் | – 2 |
| 8) டிப்பர் ஆட்டோ 4க்கு தேவைப்படும் பணியாளர்கள் | – 8 |
| 9) உரம் தயாரிப்பு மற்றும் உரக்கிடங்கு பராமரிப்பு பணிக்கு தேவைப்படும் பணியாளர்கள் | – 10 |
| 10) பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை பராமரிப்பு பணிக்கு | – 1 |
| 11) பேருந்து நிலையத்தில் உள்ள இலவச கழிப்பறை பராமரிப்பு பணிக்கு (ஆண்–1, பெண்–1) | – 2 |
| 12) பேருந்து நிலையத்தை (B Grade) சுத்தம் செய்ய தேவைப்படும் பணியாளர்கள் (1 ஷிப்டுக்கு 4 பேர் வீதம் 2 ஷிப்டுக்கு) | – 8 |
| 13) வாரச்சந்தை பராமரிப்பு பணிக்கு | – 2 |
| 14) கழிவு நீர் பண்ணை பராமரிப்பு பணிக்கு | – 2 |
| மொத்தம் | 373 |

மேற்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட 373 துப்புரவு பணியாளர் பணியிடங்களில் அனுமதிக்கப்பட்ட 159 பணியிடங்கள் போக மீதமுள்ள 214 பணியாளர்கள் பணியிடங்களை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று தனியார் நிறுவனம் (Outsourcing) மூலம் பெற்று துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள பிரேரணை ஒன்று தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு –

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அரசு ஆணை எண்.101ல் தெரிவித்துள்ள அளவுகோலின்படி தற்பொழுது புதிதாக தேவைப்படும் 214 துப்புரவு பணியாளர் பணியிடங்களை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று தனியார் நிறுவனம் (Outsourcing) மூலம் பெற்று துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள பிரேரணை ஒன்று தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.454/2015/எச்2

**பொருள்.11**

பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை ஆணை எண்.49342/02/79–2, நாள்.30.06.1979ன்படியும், சுகாதாரம் மற்றும் குடும்ப கட்டுப்பாட்டுத்துறை ஆணை எண்.2684, நாள்.12.11.1971ன்படியும், கூடுதல் இயக்குநர் அவர்களின் நேர்முக கடிதம் எண்.47420/2005/ஜே2, நாள்.02.07.2009ன்படியும் துப்புரவுப் பணியில் ஈடுபடும் துப்புரவுப் பணியாளர்கள், துப்புரவுப் பணிமேற்பார்வையாளர்களுக்கு கையுறை, காலுறை, முகவுறை, ஒளிரும் ஜாக்கெட், பாதுகாப்பு தொப்பி மற்றும் மழைகோட்டு போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் அணிந்து கொண்டுதான் துப்புரவுப் பணியில் ஈடுபட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.1297, நாள்.30.01.2015ன்படி இந்நகராட்சியில் துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்கப்பட்டு மூன்று வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டபடியாலும், தற்போது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குப்பைகள் தரம் பிரித்து வாங்குதல் மற்றும் கலவை உரம் தயாரித்தல் போன்ற பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுவதாலும் கீழ்கண்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க வேண்டியுள்ளது.

| வ. எண் | கொள்முதல் செய்ய வேண்டிய பாதுகாப்பு உபகரணங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Reflecting T-Shirt | 74 |
| 2 | ISO Grade Helmate | 50 |
| 3 | Acid Proof Nylon Glouse (10 sets / per 1 worker) | 740 |
| 4 | Cotton Face Mask (2 sets / per 1 worker ) | 148 |
| 5 | Safety Boots | 30 |
| 6 | Rain coat | 86 |

மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்களை ரூ.2,50,000/– உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிக் கோரி கொள்முதல் செய்ய நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு –

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பாதுகாப்பு உபகரணங்களை ரூ.2,50,000/– உத்தேச செலவினத்திற்குள் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிக் கோரி கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2038/2018/எச்2

**பொருள்.12**

பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இயங்கி வரும் 80 மூன்று சக்கர வாகனங்கள், 20 டம்பர் பிளேசர் மற்றும் 60 காம்பாக்டர் பின்களுக்கு 2018–19ம் ஆண்டிற்கு வருடாந்திர பழுதுப் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும், தற்போது இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக தரம் பிரித்து கொண்டு செல்வதற்கு வசதியாக தற்போது குப்பைகள் சேகரிக்க பயன்பாட்டில் உள்ள 60 காம்பாக்டர் பின்களில் 30 காம்பாக்டர் பின்களை புளுகலர் வர்ணம் அடித்தும், அதில் பொதுமக்கள் மற்ற கழிவுகளை கொட்டாத வகையில் மூடி மற்றும் தாழ்ப்பாள் போடும் பணிகள் மேற்கொள்வதற்கும் இனவாரியாக பழுதுப் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு –

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ரூ.5.00 லட்சம் உத்தேச செலவினத்தில் தற்போது பயன்பாட்டில் உள்ள 60 மூன்று சக்கர வாகனங்கள், 60 காம்பாக்டர் பின்கள் மற்றும் 20 டம்பர் பிளேசர் பின்களின் 2018–19ம் ஆண்டிற்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி இனவாரியாக பழுதுப் பராமரிப்பு பணிகள்

| | |
|---|---|
| | மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.874/2013/எச்2 |
| பொருள்.13 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஒட்டப்பாலம் பகுதியில் வாகன போக்குவரத்திற்கு சாலைகள் குறுகலாக இருந்ததால், சாலைகளை அகலப்படுத்தும் பொருட்டு, மின்கம்பங்கள் நகர்த்தி அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் சாலைகள் அகலப்படுத்தப்படும் பொழுது போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் வசதிக்காக புதிதாக மூன்று எண்ணம் பேருந்து நிறுத்தங்கள், தனியார் பங்களிப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து நிறுத்தங்களில் இரவு நேரங்களில் போதிய வெளிச்சம் இல்லாததால் உடனடியாக புதிதாக தெருவிளக்குகள் அமைக்க சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற சாலை பாதுகாப்புக்குழு ஆய்வுக் கூட்டத்தில் சார் ஆட்சியர் மற்றும் நுகர்வோர் அமைப்புகளின் கோரிக்கையின் பேரிலும், பொதுமக்கள் மற்றும் பயணிகளின் நலன் கருதியும் மூன்று பேருந்து நிறுத்தங்களின் அருகிலும் புதிதாக தெருவிளக்குகள் அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.14 | இந்நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நிமித்தமாக வெளியூர் சென்று வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயணப்படி வழங்க 2018–19ம் ஆண்டிற்கு உத்தேச செலவினமாக ரூ.1,50,000/– அனுமதிக்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.15 | இந்நகராட்சி ஆணையாளர் அலுவலகப்பணி நிமித்தமாக வெளியூர் சென்று வரும் பொழுது 2018–19ம் ஆண்டிற்கு பயணப்படி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.16 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30 அண்ணா நகரில் உள்ள கழிப்பறையை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு கழிப்பறை கட்டிடத்தில் மராமத்துப்பணி மற்றும் தண்ணீர் வசதி செய்ய தயார் செய்யப்படுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.17 | பரமக்குடி நகராட்சியில் குழல் விளக்குகள் 1827 எண்ணம், 150, 250 வாட்ஸ் சோடியம் விளக்குகள் –220 எண்ணம், உயர்கோபுர விளக்குகள் – 3 எண்ணம் 1x24 வாட்ஸ் டி5 விளக்குகள் –135 எண்ணம், 2x24 வாட்ஸ் டி5 –155 எண்ணம், 4x24 வாட்ஸ் டி5 –124 எண்ணம் 65 வாட்ஸ் சி.எப்.எல் விளக்குகள் – 279 எண்ணம் ஆக மொத்தம் 2770 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. தெருவிளக்கு பராமரிப்புப்பணிக்கு மின்கம்பியாளர் 3 இடம் மற்றும் மின்கம்பி உதவியாளர் 3 இடம் பணி அனுமதிக்கப்பட்டு பராமரிப்புப்பணி |

| | |
|---|---|
| | பார்க்கப்பட்டு வந்தது. தற்பொழுது 2 மின்கம்பியாளர்கள் ஓய்வு பெற்றதை தொடர்ந்து 2 மின்கம்பி உதவியாளர்கள், மின்கம்பியாளராக பதவி உயர்வு பெற்று பணி செய்து வருகிறார்கள். பதவி உயர்வு அளிக்கப்பட்ட மின்கம்பி உதவியாளர் 2 இடமும் காலியாக உள்ளது.<br>தெருவிளக்கு பணிகளை தனியார் மயமாக்குவதற்கு அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்படி 2 இடங்கள் காலியாக இருப்பதால் பராமரிப்புப்பணியில் தொய்வு ஏற்படுகிறது. மேலும் மழைகாலமாக இருப்பதாலும், தெருவிளக்கு பராமரிப்புப்பணியை தொய்வின்றி செய்வதற்கு காலியாக உள்ள மின்கம்பி உதவியாளர் 3 நபர்களை மாவட்ட ஆட்சித்தலைவர், இராமநாதபுரம் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் கமிட்டி விலைவிகிதத்தின்படி தனியார் மூலம் தற்காலிக பணியாளர்களை கொண்டு தெருவிளக்குப்பணி தொய்வின்றி நடைபெறுவதற்கு சுமார் 7 மாத காலத்திற்கு (டிசம்பர் 2018 வரை) ஊதியம் வழங்க ரூ.1,60,000/—க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு —<br>மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.18 | பரமக்குடி நகராட்சி 36 வார்டுகளை கொண்ட முதல்நிலை நகராட்சியாகும். இந்நகராட்சி பகுதியில் 24703 குடியிருப்புகள் உள்ளது. 31341 வரிவிதிப்புகள் உள்ளது. தற்போது 10345 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு பொதுமக்களின் உபயோகத்தில் உள்ளது. தற்போது வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/— வீதமும், குடியிருப்பு அல்லாத குடிநீர் இணைப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/— வீதமும் கட்டணமாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13277/2017/குவ1, நாள்.27.06.2018ன்படி நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் குடிநீர் திட்டங்களை முழுமையாக திறனுக்கு இயக்கவும் அதன் பயன் அனைத்து பொதுமக்களுக்கும் உடனடியாக சென்று அடையவும் வீட்டு இணைப்புகள் வழங்குவதற்காக அடிக்கடை நகராட்சி சாலைகள் வெட்டப்படுவதை தவிர்க்கவும், குடிநீர் இணைப்பு வழங்குதலில் உள்ள நடைமுறையினை மாற்றும் பொருட்டு முன் வைப்புத் தொகை (Deposit) மற்றும் இணைப்பு கட்டணத்தினை (Connection charges) சொத்துவரி விதிப்புடன் இணைத்து தவணை முறையில் வசூல் செய்துகொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி பொதுமக்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு முன் வைப்புத் தொகை மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டணத்தினை சம்மந்தப்பட்ட வீட்டு வரி விதிப்புடன் இணைத்து 10 தவணைகளில் வசூல் செய்ய நகரமைப்புகளுக்கான மையப்படுத்தப்பட்ட இணையவழி மென்பொருளில் (Urban Tree Software)ல் உரிய திருத்தங்கள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு —<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.19 | இந்நகராட்சி அலுவலகத்தில் தினசரி செய்யப்படும் சில்லறை செலவினங்களுக்கு **2018—19**ம் ஆண்டிற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920**, பிரிவு **—15**ன் கீழ், ரூ.**50,000/—** செலவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு —<br>மன்றம் அனுமதிக்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி